# மாணவர்களிடையே ஜாதி பாகுபாடு களைய குழு

**சென்னை, ஆக. 12:** பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே ஜாதி, இனப் பிரச்னைகள் இல்லாத சூழலை உருவாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் ஒரு நபர் குழுவை அமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை வெளியிட்ட உத்தரவு:

திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரியில் பள்ளி மாணவர் மற்றும் அவரது குடும்பத்தினர், சக மாணவர்களால் மிகக் கொடூரமான முறையில் சில நாள்களுக்கு முன்பு தாக்கப்பட்ட சம்பவம் தமிழக மக்கள் அனைவரையும் மிகவும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியது.

ஜாதி, மத, பேதங்களைக் கடந்து மனிதநேயத்துடன் ஒரு சமுதாயத்தைப் படைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் என்கிற நோக்கில் இந்த அரசு செயலாற்றி வருவதை மக்கள் அறிவர்.

இந்தச் சூழ்நிலையில் இது போன்ற ஒரு சம்பவம் என்னை மிகுந்தவேதனைக்குள்ளாக்கியுள்ளது. எதிர்கால சமுதாயம் ஜாதி, மதம் போன்ற பிற்போக்குச் சிந்தனைகளற்று, சகோதர உணர்வுடன் வாழ வேண்டும். புதிய தமிழ்நாடு படைக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணி கல்வி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்புப் பெருக்கம் போன்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களில் திமுக அரசு முனைப்புக் காட்டி வருகிறது.

இந்நிலையில், நான்குனேரி சம்பவம் மூலம் ஜாதி, இனப் பிரச்னைகளில் பள்ளி, கல்லூரி மாணவர்களில் சில பகுதியினர் தேவையற்ற வகையில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற கசப்பான உண்மை நமக்குத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்தவுடன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசை பாதிக்கப்பட்ட மாணவர் மற்றும் அவரின் குடும்பத்தினரைச் சந்தித்து, ஆறுதல் கூறி வர அனுப்பி வைத்தேன்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அந்த மாணவரின் உயர் கல்விச் செலவு முழுவதையும் அவரே ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

**ஒரு நபர் குழு:** இளைய சமுதாயத்தினரிடையே ஜாதி, இன உணர்வு பரவியிருப்பது எதிர்காலத் தமிழகத்தின் நலனுக்கு உகந்ததல்ல. இது உடனடியாக சரி செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியமான பிரச்னை என்பதால், இதில், அரசு எந்த வகையான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்தும், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே ஜாதி, இனப் பிரிவினைகள் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அரசுக்கு ஆலோசனைகளை வழங்க ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் ஒரு நபர் குழு அமைக்க உத்தரவிட்டுள்ளேன்.

இந்தக் குழு மேற்படி பொருள் தொடர்பாக கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூக சிந்தனையாளர்கள், பத்திரிகை துறையினர் எனப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கருத்துகளைப் பெற்று, அதனடிப்படையில் அரசுக்கு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று முதல்வர் கூறியுள்ளார்.

**சம்பவம் என்ன?:** நான்குனேரியில் பிளஸ் 2 படித்து வரும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்த சின்னதுரை என்கிற மாணவரும், அவரது தங்கை சந்திரா செல்வியும் சக மாணவர்களால் வீடு புகுந்து அரிவாளால் வெட்டப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இந்தக் குழுவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளார்.

ஏற்கெனவே, ஆன்லைன் சூதாட்ட தடை அவசரச் சட்டம் குறித்து பரிந்துரைகள் வழங்குவதற்காக கே.சந்துரு தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அவர் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் அவசரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அதைப்போல சிறார் இல்லங்களின் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும் கே.சந்துரு தலைமையில் தமிழக அரசு முன்னரே குழு அமைத்துள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



'மாணவர்களிடையே ஜாதிய பாகுபாட்டைக் களைவது தொடர்பாக கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூக சிந்தனையாளர்கள், பத்திரிகை துறையினர் எனப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையிலான ஒரு நபர் குழு கருத்துகளைப் பெற்று, அதனடிப்படையில் அரசுக்கு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும்'

—முதல்வர் மு.க.ஸ்டாலின்



## நான்குனேரி சம்பவம்: முதல்வர் ஆறுதல்

**சென்னை/திருநெல்வேலி, ஆக. 12:** நான்குனேரி சம்பவத்தில் சக மாணவர்களால் அரிவாளால் வெட்டப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாணவர் சின்னத்துரை மற்றும் அவருடைய சகோதரி சந்திரா செல்வி ஆகியோரை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து ஆறுதல் கூறினார்.

அப்போது அவருடைய கைப்பேசிக்கு தொடர்புகொண்ட முதல்வர் மு.க. ஸ்டாலின், பாதிக்கப்பட்டவர்களின் தாய் அம்பிகாபதியிடம் குழந்தைகள் குறித்து நலம் விசாரித்து ஆறுதல் கூறியதோடு, தமிழக அரசின் சார்பில் உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும். இந்த அரசு எப்போதும் உங்களோடு இருக்கும் என உறுதியளித்தார்.

**நிதியுதவி:** மாணவர் மற்றும் அவரது தங்கை அரிவாளால் தாக்கப்பட்ட சம்பவத்தைப் பார்த்து அதிர்ச்சியில் உயிரிழந்த கிருஷ்ணன் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதி வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

## 'ஊட்டச்சத்து உறுதிசெய்' திட்டம்

# பயனடைந்த குழந்தைகளிடம் முதல்வர் ஸ்டாலின் நலம் விசாரிப்பு

**சென்னை, ஆக.12:** 'ஊட்டச்சத்து உறுதி செய்' திட்டத்தின் கீழ் பயன்பெற்ற குழந்தைகளையும் பெற்றோர்களையும் சென்னை தலைமைச் செயலகத்துக்கு நேரில் வரவழைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நலம் விசாரித்தார்.

6 வயதுக்குள்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கும் வகையில், தமிழக அரசால் 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் வருண் (வயது 4), நுசாய்பா (வயது 2) மற்றும் சாய்திரன் (2 1/2 வயது) ஆகிய குழந்தைகளின் பெற்றோரிடம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நலம் விசாரித்தார். குழந்தைகளின் உடல்நலம் குறித்தும் கேட்டறிந்தார்.

குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாம்களின் போது இதயத்தில் பாதிப்பு கண்டறியப்பட்டு, அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட ஹர்ஷித் (வயது 2) மற்றும் தேஜாஸ்ரீ ஆகிய குழந்தைகளின் பெற்றோர்களிடம் அந்தக் குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இதய அறுவை சிகிச்சை குறித்த விவரங்களை கேட்டறிந்து, நலம் விசாரித்தார்.



சென்னை தலைமைச் செயலகத்தில், 'ஊட்டச்சத்தை உறுதிசெய்' திட்டம் மூலம் பயன்பெற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கு சத்துப் பெட்டகம் வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் சமூக நலத் துறை அமைச்சர் கீதாஜீவன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, சமூக நலத் துறைச் செயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு.

மேலும், குழந்தைகளின் பெற்றோர்களிடம் சத்துப் பெட்டகம் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்களையும் முதல்வர் அப்போது வழங்கினார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் சுகாதாரத் துறை ஒன்றிணைந்து, 6 வயதுக்கு குழந்தைகளில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 6 வயது வரையுள்ள மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 9.3 லட்சம் குழந்தைகள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டார்கள்.

அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உள்பட வெவ்வேறு மருத்துவ சிகிச்சைகள் மாவட்ட ஆரம்ப சிகிச்சை மையங்களில் அளிக்கப்பட்டது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் பிறவியிலேயே கண்டறியப்பட்ட இருதய நோய், பிறவியிலேயே கண்டறியப்பட்ட மூளை வளர்ச்சி குறைபாடு, பிறவி பார்வை குறைபாடு, பிறவி காது கேளாமை, பிறவி கால் ஊனம் போன்ற பிறவி குறைபாடுகளை உடைய 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்பொழுது அவர்கள் நலமாக உள்ளனர் என்று தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் சமூக நலத் துறை அமைச்சர் பி. கீதாஜீவன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

# நாட்டின் பெரும் வளர்ச்சிக்கு ட்ரோன் கொள்கை வழிவகுக்கும்

## மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர்

**சென்னை, ஆக. 12:** மத்திய அரசின் புதிய ட்ரோன் கொள்கை நாட்டின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய அடித்தளமாக இருக்கும் என்று மத்திய செய்தி ஒலிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்குர் தெரிவித்தார்.

சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி, யுனிசெஃப் சார்பில் 'இளைஞர்களின் தாக்கம்' எனும் தலைப்பில் சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அவர் பேசியதாவது:

**கூட்டு முயற்சி:** உலகில் இளைஞர்கள், இளம் சக்தி அதிகமுள்ள நாடாக இந்தியா திகழ்கிறது. தங்களிடம் குவிந்து கிடக்கும் ஆற்றலை சரியாகப் பயன்படுத்தி நாட்டுக்கும், உலகுக்கும் உரிய பங்களிப்பை இளைஞர்கள் வழங்க வேண்டும்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்கள், செயற்கை நுண்ணறிவால் வேலையிழப்பு உள்பட பல்வேறு சவால்களை இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இத்தகைய சவால்களை கூட்டு முயற்சி மூலம் மட்டுமே வெல்ல முடியும்.

**கட்டுப்பாடுகள் தளர்வு:** மத்திய அரசின் புதிய ட்ரோன் கொள்கையால் வளர்ச்சிக்குரிய பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முன்பு ட்ரோன்கள் பறக்க பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆனால், பாதுகாப்பு, சேவை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

ஹிமாசல பிரதேசத்தில் மனிதர்கள் செல்ல முடியாத பகுதிகளுக்கு ட்ரோன்கள் மூலம் பொருள்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவை கொண்டுசெல்லப்படுகின்றன. அதேபோல, புகைப்படத் தொழில், பயிர்களுக்கு மருந்து அடித்தல் ஆகியவற்றில் ட்ரோன் தொழில்நுட்பம் மிகப்பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ட்ரோன் தொழில்நுட்பம் மேலும் வளர்ச்சி அடையும்போது ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு மிகக் குறைந்த நேரத்தில் செல்ல முடியும். ட்ரோன் தொழில்நுட்பத்தில் எண்ணற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தற்சார்பு:** 100-ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும்போது இந்தியா தற்சார்புடன் பல்வேறு வளர்ச்சிகளைப் பெற்றிருக்கும். காலனியாதிக்க மனநிலையில் இருந்து இளைஞர்களை விடுவித்துவிட்டால் அடுத்த 25 ஆண்டுகளில் நாடு மிகப்பெரிய வளர்ச்சி அடையும்.

'உலகமே ஒரு குடும்பம்' என்ற கருப்பொருளுடன் பல்வேறு நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுவருகிறது. 140 கோடி மக்கள்தொகை கொண்ட நாட்டில், தண்ணீர், மின்சாரம், பெட்ரோல், டீசல் ஆகியவற்றை குறைந்த அளவு சேமித்தாலும், அதன்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து நாட்டுக்கு உதவலாம்.

**மூன்றாமிடம் நோக்கி...:** உலகின் முன்னணி நாடுகள் வழங்க முன்வராத காலத்தில் 160-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கரோனா தடுப்பூசியை இந்தியா விநியோகித்தது. 9 ஆண்டுகளுக்கு முன்பு உலகப் பொருளாதாரத்தில் 10-ஆவது இடத்தில் இருந்த இந்தியா, இப்போது 5-ஆவது இடத்தில் உள்ளது. இன்னும் 3 ஆண்டுகளுக்குள் 3-ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறும் என்றார் அவர்.

கருத்தரங்கத்தில், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை இணைச் செயலர் நிதேஷ் குமார் மிஸ்ரா, யுனிசெஃப் இந்தியா பிரதிநிதி சிந்தியா மெக்காஃப்ரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




சென்னையில் யுனிசெஃப் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற 'இளைஞர்களின் தாக்கம் குறித்த கருத்தரங்கத்தில், பசுமைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக மரக்கன்றுகளுடன் மத்திய செய்தி ஒலிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், துறை இணைச் செயலர் நிதேஷ் குமார் மிஸ்ரா, யுனிசெஃப் இந்தியா பிரதிநிதி சிந்தியா மெக்காஃப்ரி உள்ளிட்டோர்.

EVA STALIN IAS A

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## ரஷியாவின் லூனா–25 ஆய்வுக் கலம்

# மீண்டும் தொடங்கும் விண்வெளிப் பந்தயம்!



இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி–இத்தாலி–ஜப்பான் கூட்டு சக்திகளை ஒன்றிணைந்து ஒடுக்கிய அமெரிக்க தலைமையிலான நேசப்படைகளும், சோவியத் யூனியனும் பின்னர் உலகில் தங்களது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்காக பனிப் போரில் இறங்கின.

அதற்காக, இரு சர்வாதிகார சக்திகளும் பல்வேறு நாடுகளை பகடைக் காய்களாகப் பயன்படுத்தின. ஐரோப்பா, அரேபியா, ஆப்பிரிக்கா, ஆசியா என்று எல்லா கண்டங்களிலும் வியாபித்திருந்த அந்தப் போட்டா போட்டி, விண்வெளியையும் விட்டு வைக்கவில்லை.

விண்வெளி ஆய்வில் ஒன்றை ஒன்று முந்திவிட வேண்டும் என்ற முனைப்பில் அளவுக்கு அதிகமான வள ஆதாரங்களை அமெரிக்காவும் சோவியத் யூனியனும் செலவிட்டன.

'விண்வெளிப் பந்தயம்' என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட இந்தப் போட்டி, விண்வெளி மர்மங்களை யார் முதலில் தெரிந்து கொள்வது என்பதற்கானது மட்டும் இல்லை.

விண்கலங்களை விண்ணில் செலுத்துவதற்கான ராக்கெட் தொழில்நுட்பங்களில் கைதேர்ந்து இருப்பது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அவசியம் என்று இரு நாடுகளுமே கருதின. மேலும், விண்கலங்கள் வெறும் ஆய்வுக்கானவை மட்டுமல்ல, அவை உளவுப் பணிகளுக்கும் அடிப்படைத் தேவையானவை, எதிர்கால் போரில் முக்கியப் பங்கு வகிக்கக் கூடியவை என்பதை அமெரிக்காவும், சோவியத் யூனியனும் நன்கு தெரிந்து வைத்திருந்தன.

இதுதான் விண்வெளிப் பந்தயத்தில் இரு நாடுகளும் முனைப்பு காட்டியதற்கான காரணம்.

இருந்தாலும், இந்த விவகாரத்தில் போட்டியிட்டால் தேவையற்ற பொருளாதார இழப்புகள்தான் ஏற்படும் என்று நாளடைவில் புரிந்து கொண்ட அமெரிக்காவும், சோவியத் யூனியனும் விண்வெளிப் பந்தயத்தின் வேகத்தை 1970–களில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்தன.




காலப்போக்கில் இரு நாட்டு விண்வெளி ஆய்வு நிலையங்களும் ஒருங்கிணைந்து ஆய்வுத் திட்டங்களை நிறைவேற்றின.

1991–இல் சோவியத் யூனியன் சிதறுண்டு, பனிப் போர் முடிவுக்கு வந்த பிறகு சோவியத் யூனியனின் விண்வெளி ஆய்வுக் கட்டமைப்புகள் அனைத்தும் ரஷியா வசம் வந்தன. அதையடுத்து, தனது விண்வெளி ஆய்வு ஒத்துழைப்பை ரஷியாவுடன் அமெரிக்கா தொடர்ந்தது.

உலக அரசியலில் இரு நாடுகளும் எதிரும் புதிருமாக இருந்த காலத்திலும், விண்வெளித் துறையில் மட்டும் அந்த நாடுகள் மிகவும் அபூர்வமாக கைகோத்து செயல்பட்டன.

குறிப்பாக, விண்வெளிக்கு மனிதர்களை கொண்டுசெல்வதற்கான அமெரிக்காவின் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டதால், ரஷியாவின் சோயுஸ் விண்கலம் மூலமே நாசா ஆய்வாளர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்று வந்தனர்.

இந்த சுமுகமான சூழலிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான போட்டி மனப்பான்மை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. 'மீண்டும் விண்வெளிக்கு' என்ற கோஷத்துடன் தொழிலதிபர் எலான் மஸ்கின் ஸ்பேஸ்–எக்ஸ் நிறுவன டிராகன் விண்கலம் போன்றவை நாசாவின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டன. விண்வெளிக்கு வீரர்களை அழைத்துச் செல்ல ரஷியாவை இனியும் சார்ந்திருக்கக் கூடாது என்று அமெரிக்கா கருதியதே இதற்குக் காரணம்.



இந்தச் சூழலில், நிலவின் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ரஷியாவின் லூனா–25 விண்கலம் சோயுஸ் ராக்கெட் மூலம் வெள்ளிக்கிழமை விண்ணில் ஏவப்பட்டது. நிலவின் தென் துருவத்தில் அந்த விண்கலம் தரையிறங்கி அங்கிருக்கும் நீர் வளம் பற்றியும், பிற கனிம வளங்கள் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளவிருக்கிறது.

அதே பகுதிக்கு வரும் 2025–ஆம் ஆண்டுக்குள் மீண்டும் மனிதர்களை அனுப்பி ஆய்வு மேற்கொள்வதற்கான பணிகளை அமெரிக்காவின் நாசா மேற்கொண்டு வரும் நிலையில், 47 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக லூனா–25 விண்கலத்தை ரஷியா அனுப்பியுள்ளது அந்த நாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே மீண்டும் விண்வெளிப் பந்தயம் தொடங்கியுள்ளதைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

பனிப் போர் காலத்தில் தொழில்நுட்ப மேன்மையை பறைசாற்றுவதற்காகவும், தேசியப் பாதுகாப்புக்காகவும்தான் இந்தப் போட்டி நடைபெற்றது.

ஆனால், தற்போது தொடங்கியுள்ள போட்டி, பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கூறப்படுகிறது. தொலைதூர விண்வெளி ஆய்வுகளுக்கு பூமியிலிருந்து ஆய்வுக் கலங்களை அனுப்புவதைவிட, நிலவில் ஒரு நிரந்தர ஆய்வு நிலையம் அமைத்து, அந்தப் பகுதியில் கிடைக்கும் நீர் மற்றும் பிற வளங்களைக் கொண்டு ராக்கெட் எரிபொருள் உள்ளிட்டவற்றை தயாரித்து அதன் மூலம் விண்கலங்களை அனுப்புவது மிகவும் செலவு குறைவு என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஏற்கெனவே அத்தகைய ஆய்வு நிலையத்தை 2050–க்குள் நிலவில் அமைக்க ரஷியாவும், சீனாவும் ஒப்புக் கொண்டுள்ளன.

நிலவின் தென் புலத்தில்தான் இத்தகைய வளங்கள் கொட்டிக் கிடப்பதாகக் கூறப்படும் நிலையில், அந்தப் பகுதியை கைக்கொள்வதற்குத்தான் இரு நாடுகளும் இந்த புதிய விண்வெளிப் பந்தயத்தில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தப் போட்டியில் இந்தியாவின் சந்திரயான்–3 விண்கலமும் சேர்ந்துள்ளது. அந்த விண்கலம் ஆகஸ்ட் 23–இல் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கவுள்ளது. அதே நாளில் ரஷியாவின் லூனா–25 விண்கலமும் தரையிறங்குகிறது.

இருந்தாலும், இது பனிப் போர் காலமல்ல; சர்வதேச விண்வெளி ஆய்வில் அமெரிக்கா, ரஷியா மட்டுமின்றி இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளும் வெகு வேகமாக முன்னேறி வருகின்றன.

எனவே, இது 20–ஆம் நூற்றாண்டு காலத்து விண்வெளிப் பந்தயம் போல் இல்லாமல், ஆரோக்கியமான போட்டியாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம் என்கிறார்கள் சில நிபுணர்கள்.

**– நாகா**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மாமல்லபுரத்தில் சர்வதேச காற்றாடி திருவிழா



மாமல்லபுரத்தில் 2– ஆவது தமிழ்நாடு சர்வதேச காற்றாடி திருவிழாவை தொடங்கிவைத்து விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்ட அமைச்சர் தா.மோ.அன்பரசன். உடன் செங்கல்பட்டு ஆட்சியர் ஆ.ர.ராகுல் நாத், காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் க.செல்வம் உள்ளிட்டோர்.

**செங்கல்பட்டு, ஆக.12:** மாமல்லபுரத்தில் இரண்டாவது முறையாக நடைபெறும் சர்வதேச காற்றாடி திருவிழாவினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை, தனியாருடன் இணைந்து மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை காட்சி (ஓசன் வியூ) திடலில் ஆக. 15–ஆம் தேதி வரை காற்றாடி திருவிழாவை நடத்த உள்ளது. இதில் இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, பிரான்ஸ், வியட்நாம், சீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய எட்டு நாடுகளைச் சேர்ந்த சர்வதேச காற்றாடி அணிகள், 200–க்கும் மேற்பட்ட காற்றாடிகளுடன் கலந்துகொள்ள உள்ளன.

இந்த ஆண்டு காற்றாடி விழாவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 'அலைகளின் சிறகுகள்', 'கடல்வாழ் உயிரினங்களை காப்பாற்றுங்கள்', 'தாய் பூமியைக் காப்பாற்றுங்கள்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, பல்வேறு கடல் விலங்குகள் வடிவத்திலான காற்றாடிகள் பறக்க விடப்பட்டன. காற்றாடி திருவிழாவில் கலந்துகொள்ள சிறுவர்களுக்கு அனுமதி இலவசம். மேலும், விவரங்களுக்கு www.tnikf.com என்ற இணையதள முகவரியில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண் இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சியர் ராகுல் நாத், திருப்போரூர் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர் பாரதிதேவி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் இதயவர்மன், மாவட்ட சுற்றுலா அலுவலர் சக்திவேல், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.